தினமணி

நெல், பருத்தி, கரும்பு விவசாயிகள் கவனத்துக்கு...

First Published : 15 Dec 2011 12:01:00 AM IST



கோவை: தமிழகத்தில் நெல், பருத்தி, கரும்பு, நிலக்கடையில் பூச்சி நோய் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பரவலாக நடத்திய பூச்சி, நோய் ஆய்வின்படி டிசம்பர் மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் வெளியிடப்படுகிறது.

நெல் : நெல் பயிரில் இலைச் சுருட்டுப் புழு மற்றும் தண்டு துளைப்பான் தாக்குதல் பரவலாக புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருவாரூர், நாமக்கல், திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 5 சதம் தயாரித்து பயிர்களில் தெளிக்கவும் மற்றும் விளக்கு பொறி வைத்து அந்திப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும். அந்திப் பூச்சி அதிகமாக காணப்பட்டால் - டிரைகோகிராம்மா ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 சிசி என்றளவில் வயலில் விடவும்.

பூச்சிகளின் பாதிப்பு அதிகமாக இருக்கும் நிலையில் ரசாயன பூச்சிக் கொல்லி குளோர்பைரிபாஸ் 2.5 மி.லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு (அ) பிரப்பனோபாஸ் 2 மி.லி. ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்றளவில் கலந்து தெளிக்கவும். நெல்லில் பாக்டீரியா இலை கருகல் நோய் திருவாரூர்

மாவட்டத்தில் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த 2.5 கிராம் காப்பர் ஹைட்ராக்ஃஸைடு என்ற மருத்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து உபயோகிக்கவும். கடந்த நவம்பர் மாத இறுதியில் தொடர்ந்து மழை பெய்ததாலும் தட்பவெட்ப நிலை சாதகமாக இருந்ததாலும் நெற்பயிரினில் நெல்குலை நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது. அதனை கட்டுப்படுத்துவதற்கு 0.1 சதவீதம் (1 மி.லி./ 1 லிட்டர் தண்ணீரில் டிரைசைகுளோசோல் என்ற மருந்தினை 10 நாட்கள் இடை வெளியில் தெளிக்கவும்.

பருத்தி: தேனி மாவட்டத்தில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தென்படுகின்றன. மஞ்சள் நிற ஒட்டும் பொறியை உபயோகித்து இவற்றின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும். காய் புழுக்களின் நடமாட்டம் குறைவாகவே தென்படுகிறது. இவற்றை இனக் கவர்ச்சிப் பொறிகளை வைத்து கட்டுப்படுத்தவும்.

கரும்பு: சிவகங்கை, தஞ்சை, நாமக்கல் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தண்டு துளைப்பான் தாக்குதல் தென்படுகின்றது. இதைக் கட்டுபடுத்த டிரைக்கோகிராம்மா என்ற முட்டை ஒட்டுண்ணிகளை ஒரு ஏக்கருக்கு 6 சிசி என்ற அளவில் வெளியிட்டுக் கட்டுப்படுத்தவும்.

நிலக்கடலை: நாமக்கல் மாவட்டத்தில் இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதல் காணப்படுகிறது. விளக்குப் பொறிகளை வைத்து அந்திப் பூச்சிகளின் நடமாட்டத்தினைக் கண்காணிக்கவும். தேவைப்பட்டால் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவிகிதம் தெளித்துக் கட்டுப்படுத்தவும்.

பப்பாளி மாவுப் பூச்சி: மரவள்ளி, பப்பாளி மற்றும் மல்பெரி ஆகிய பயிர்களில் பப்பாளி மாவுப் பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்த அருகில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்லூரிகள், ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண் அறிவியல் நிலைகளைத் தொடர்பு கொண்டு ஒட்டுண்ணிகளை இலவசமாகப் பெற்று அவற்றை பாதிக்கப்பட்ட வயல்வெளிகளில் விட்டு கட்டுப்படுத்தவும்.

மேலும், விவரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி 0422-6611214.

பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி 0422- 6611226 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**"உணவுப் பொருள் விநியோகம்: எஸ்.எம்.எஸ். மூலம் புகார் கூறலாம்'**

First Published : 15 Dec 2011 01:25:05 AM IST



உணவுத் துறையின் செயல்பாடுகள் குறித்து அதிகாரிகளுடன் சென்னையில் புதன்கிழமை ஆலோசனை நடத்திய அந்தத் துறை அமைச்சர் ஆர். காமராஜ். உடன், (இடமிருந்து) உணவு பொ

சென்னை, டிச. 14: உணவுப் பொருள் விநியோகத்தில் புகார்கள் ஏதேனும் இருப்பின், எஸ்.எம்.எஸ். மூலம் புகார்களைத் தெரிவிக்கலாம். உணவுத் துறை அமைச்சர் ஆர். காமராஜ் தலைமையில் சென்னையில் புதன்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உணவுப் பொருள் விநியோகம் குறித்து ஆலோசிக்கப்பட்டது. ரேஷன் அட்டைதாரர்களுக்கு அவர்களது புகார்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவிக்க வசதியாக தொலைபேசி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி, மாநில நுகர்வோர் சேவை மையத்தின் 729998002, 7280018002 ஆகிய எண்களில் புகார்களைத் தெரிவிக்கலாம். மேலும், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் பஷீர் அகமதை 9445464748 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

**இன்று சட்டப் பேரவை சிறப்புக் கூட்டம்**

First Published : 15 Dec 2011 02:30:51 AM IST

Last Updated : 15 Dec 2011 04:22:43 AM IST



சென்னை, டிச. 14: முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னை குறித்து விவாதிப்பதற்காக தமிழக சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெறுகிறது.

பேரவையில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பேசி முடித்தபின், முதல்வர் ஜெயலலிதா அதற்கு பதில் அளிக்கவுள்ளார்.

மேலும், பேரவையில் உள்ள அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாகத் தீர்மானமும் நிறைவேற்றப்பட உள்ளது.

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னை தீவிரமடைந்து வருகிறது. அணை பலவீனமாக உள்ளது என கேரளமும், அணை பாதுகாப்பாக உள்ளது என தமிழகமும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இந்தப் பிரச்னை தொடர்பான வழக்கில், "136 அடி வரை நீரைத் தேக்கலாம்' என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னையில் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த கருத்துடன் இருப்பதாக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்திருந்தார்.

இருப்பினும் தி.மு.க., தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகள் தமிழகக் கட்சிகளுடைய ஒற்றுமையைக் காட்ட அனைத்துக் கட்சி கூட்டம் கூட்ட வேண்டும். அல்லது சட்டப் பேரவையைக் கூட்டி விவாதிக்க வேண்டும் என்று கோரி வந்தன.

இந்த நிலையில் வியாழக்கிழமை பேரவையின் சிறப்புக் கூட்டம் நடைபெறும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருந்தார்.

சிறப்புக் கூட்டம்: இதன்படி, முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னை குறித்து விவாதிப்பதற்காக தமிழக சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டம் வியாழக்கிழமை காலை 11 மணிக்குத் தொடங்குகிறது.

கூட்டத்தின் தொடக்கமாக, மறைந்த அமைச்சர் சொ.கருப்பசாமி உள்ளிட்டோருக்கு இரங்கல் தெரிவிக்கப்படும் எனத் தெரிகிறது. இந்த இரங்கலைத் தொடர்ந்து பேரவைக் கூட்டம் ஐந்து அல்லது 10 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 11.15 மணியளவில் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேரவை கூடியதும், ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் தங்களது கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்படும். தி.மு.க., தே.மு.தி.க. கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பேசி முடித்த பிறகு, தமிழக அரசு சார்பில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து முதல்வர் ஜெயலலிதா விளக்குவார் எனத் தெரிகிறது.

"முல்லைப் பெரியாறு அணையில் தமிழகத்தின் உரிமையை எந்தக் காரணம் கொண்டும் விட்டுத் தர முடியாது' எனத் தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா ஏற்கெனவே கூறியுள்ளார்.

பேரவையின் சிறப்புக் கூட்டம் நடைபெறுவதற்கு முந்தைய தினத்தில் தி.மு.க., தே.மு.தி.க. ஆகிய கட்சிகள் தென் மாவட்டங்களில் ஆர்ப்பாட்டத்தையும், மனிதச் சங்கிலி போராட்டத்தையும் நடத்தியுள்ளன. இந்தப் பிரச்னையில் தமிழக அரசியல் கட்சிகள் நடந்து கொள்ள வேண்டிய விதம் குறித்து முதல்வர் ஜெயலலிதா ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தச் சூழ்நிலையில், பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் தனது உரையின்போது அத்தகைய வேண்டுகோளை மீண்டும் அரசியல் கட்சிகளுக்கு அவர் விடுப்பார் எனக்
கூறப்படுகிறது.

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னைக்காக, பேரவை சிறப்புக் கூட்டம், பிரதமருடன் சந்திப்பு என கேரளம் ஒருபுறம் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. தமிழகமும் தனது நிலையை விளக்கவும், கட்சிகளிடையே உள்ள ஒருமித்த கருத்தை எடுத்துக் காட்டும் வகையிலும் வியாழக்கிழமை நடைபெறும் சிறப்புக் கூட்டம் அமைய இருப்பதால் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

**திமுக பங்கேற்பு**

சென்னை,டிச.14: முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக வியாழக்கிழமை கூடும் சட்டப்பேரவை சிறப்புக் கூட்டத்தில் திமுக எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்கின்றனர். முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக சட்டப்பேரவை சிறப்புக்கூட்டம் வியாழக்கிழமை (டிச.15) காலை 11 மணிக்குத் தொடங்குகிறது.

இந்தக் கூட்டத்தில் சட்டப்பேரவை திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் திமுக எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்கின்றனர். சட்டப்பேரவையில் திமுக உறுப்பினர்கள் எண்ணிக்கை 23 ஆகும்.

கருணாநிதி பங்கேற்பு?... முல்லைப் பெரியாறு அணை விவகாரப் பிரச்னை என்பதால் திமுக தலைவர் கருணாநிதி இந்தக் கூட்டத்தில் பங்கேற்பார் எனப் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் இந்தக் கூட்டத்தில் அவர் பங்கேற்கவில்லை என்று திமுக தரப்பில் கூறப்படுகிறது.

கருணாநிதி சக்கர நாற்காலியைப் பயன்படுத்தி வருகிறார். அவரால் எளிதில் சென்று அமரும் வகையில் இருக்கை ஒதுக்கீடு செய்யவில்லை என்று முன்பே திமுகவினர் குற்றஞ்சாட்டியிருந்தனர். ஆனால் அரசு தரப்பில் அப்படியொரு கோரிக்கை இதுவரை எங்களுக்கு வைக்கப்படவில்லை என்று கூறுகின்றனர்.

கூட்டம்: சட்டப்பேரவை சிறப்புக் கூட்டத்தில் பங்கேற்கும் திமுக எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் காலை 9 மணிக்கு அண்ணா அறிவாலயத்துக்கு வருகின்றனர். அங்கு ஆலோசனை நடத்திவிட்டு ஒன்றாகப் பேரவைக்குச் செல்கின்றனர். சட்டப்பேரவையில் திமுக சார்பில் மு.க.ஸ்டாலின் பேசுவார் என்று தெரிகிறது.

**மஞ்சள் சாகுபடி நோய் தாக்குதலை சமாளிப்பது எப்படி?**

First Published : 15 Dec 2011 12:01:00 AM IST



நோய்த் தாக்குதலுக்குள்ளான மஞ்சள் பயிர்கள்.

கிருஷ்ணகிரி: மஞ்சள் சாகுபடியின்போது நோய் தாக்குதலை சமாளிப்பது எப்படி என்பது குறித்து கிருஷ்ணகிரி மாவட்டம் பையூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி நிலையம் யோசனை தெரிவித்துள்ளது.

இது குறித்து பேராசிரியர்கள் கி. பூர்ணிமா, கி. கல்பனா தெரிவித்துள்ளதாவது:

பொதுவாக மஞ்சள் வேர் முடிச்சுகளில் நூற்புழுக்களின் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. இப்புழுக்கள் செம்மண் கலந்த மணற்பாங்கான நிலங்களில் அதிகம் காணப்படுகின்றன. இப்புழுக்கள் மஞ்சளின் வேர்களைப் பாதிக்கின்றன. எனவே, வேர்கள் மூலம் ஊட்டச்சத்து, தண்ணீர் எடுத்துச் செல்லப்படுவது தடைபடுகிறது.

விதைக்கப்பட்ட 3 மாதங்களில் மஞ்சள் பயிரில் தாக்குதல் உண்டானால் விரலியோட்டம் வெகுவாகப் பாதிக்கப்பட்டு, 70 முதல் 80% வரை இழப்பைச் சந்திக்க வேண்டிவரும். நூற்புழு தாக்கியச் செடிகள் வளர்ச்சி குன்றி, இலைகள் மஞ்சள் நிறமடைந்து காணப்படும்.

தாக்கப்பட்ட மஞ்சளின் வேர்களில் ஆங்காங்கே வீக்கங்கள், மிளகு போன்ற வேர் முடிச்சுகள் காணப்படும். புகையிலை, மிளகாய், கத்தரி, தக்காளி, பெரிய வெங்காயம், வாழை போன்ற

பயிர்களை பயிர் சுழற்சியிலோ அல்லது ஊடுபயிராகவோ பயிரிடுவதைத் தவிர்ப்பதன் மூலம் வேர் முடிச்சு நூற்புழுக்களின் தாக்குதலைக் குறைக்க இயலும்.

மேலாண்மை

மஞ்சள் நடுவதற்கு முன் கடைசி உழவின் போது ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடுவதால் நூற்புழுக்களின் பெருக்கம் மற்றும் தாக்குதலை ஓரளவு குறைக்கலாம். மீண்டும் யூரியா இடும்போது 5 முதல் 10 கிலோ வரை வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும்.

தொழு உரம், கம்போஸ்ட் உரம் இடுவதும் இலுப்பைப் புண்ணாக்கு ஏக்கருக்கு 100 கிலோ இடுவதும் பலனளிக்கும். பாதிக்கப்பட்ட பயிரை அடையாளங்கண்டு, ஏக்கருக்கு 13 கிலோ கார்போபியூரான் குருணைகளை பயிரைச் சுற்றி 2 முதல் 3 செ.மீ. ஆழத்தில் இடவைப்பு முறையில் விதைத்த 3-வது மற்றும் 5-வது மாதங்களில் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

செண்டு மல்லியை ஓரங்களில் பயிரிட்டால் நூற்புழுவைக் கட்டுப்படுத்தலாம்.

மஞ்சள் கிழங்கு அழுகல் நோய்

இந்நோயால் பாதிக்கப்பட்ட செடிகள் வளர்ச்சி குன்றி, இலைகள் மஞ்சள் நிறமடைந்து சுருண்டு காணப்படும். தாக்கப்பட்ட மஞ்சளின் வேர் மற்றும் கிழங்குகளில் அழுகல் காணப்படும்.

வேர்களில் நூற்புழுக்கள் உண்டாக்கிய துளைகள் மூலம் பூஞ்சாணம் உள்ளே செல்வதால் நூற்புழு தாக்கியச் செடிகளில் கிழங்கு அழுகல் நோய் தாக்குதலின் வாய்ப்புகள் கூடுதலாக இருக்கும்.

மேலாண்மை

மெட்டலாக்சில் 2 கிராமை ஒரு லிட்டர் என்ற அளவில் கலந்து, அதில் விதைக் கிழங்கை 30 நிமிடம் ஊறவைத்து நட வேண்டும். நன்கு வளர்ந்த செடிக்கு மெட்டலாக்சில் (அ) மேங்கோசெப் 2 கிராம் (அ) காப்பர் ஆக்ஸிகுளோரைடு 3 கி (அ) காப்பர் ஆக்சைடு 1.5 கிராம் இவற்றை தூர் பகுதியில் நனையும்படி ஊற்றவும்.

இலை தீயல் நோய்

நட்ட வயலில் இலைகளின் இருபக்கமும் வட்ட வடிவ அல்லது ஒழுங்கற்ற வட்ட வடிவமான புழுப்பு நிறப் புள்ளிகள் தோன்றும். பின் கரும்பழுப்பு நிறமாகி இலைப் புள்ளிகளின் அளவு பெரிதாகும். இளம் இலைகளை அதிக அளவு பாதிப்பதால், அவை முதிர்ச்சி அடையாமலே காய்ந்து விடும். அதிகளவில் பாதிக்கப்பட்ட வயல் பார்ப்பதற்கு தீய்ந்து போன தோற்றத்தைத் தரும். இந் நோயின் பாதிப்பால் விளைச்சல் பாதிக்கப்படும்.

இலைப்புள்ளி நோய்

இலையின் மேல் பகுதியில் பழுப்பு நிறப் புள்ளிகள் பல்வேறு வடிவத்துடன் தோன்றும். நோயின் தீவிரம் அதிகரிக்கும்போது, புள்ளிகள் வளர்ந்து நீள்வட்ட வடிவமாக இருக்கும். இலைப் புள்ளிகள் புழுப்பு நிற விளிம்புகளையும், சாம்பல் நிற நடுப் பகுதியையும் கொண்டிருக்கும். நோய் முதிர்ச்சியடைந்த நிலையில் இலைப் புள்ளிகள் ஒன்று சேர்ந்து, இலைகள் காய்ந்து பின் கீழே உதிர்ந்துவிடும்.

மேலாண்மை

பாதிக்கப்பட்ட இலைகளைக் கிள்ளி எடுத்து எரித்து விட வேண்டும். பின்னர் ஒரு ஹெக்டேருக்கு காப்பர் ஆக்சிகுளோரைடு 1,250 கிராம் அல்லது மேன்கோசெப் 400 கிராம் என்னும் அளவில் நோய் கண்டவுடன் தெளிக்க வேண்டும்.

நோயின் தீவிரத்தைப் பொறுத்து, 2 அல்லது 3 முறை 10 அல்லது 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். தொடர்பு எண்: 92444-04789.

**பணவீக்கம் 9.11%**

First Published : 15 Dec 2011 02:52:59 AM IST

புது தில்லி, டிச. 14: நவம்பர் மாதத்தில் பணவீக்க விகிதம் 9.11 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அக்டோபர் மாதத்தில் இந்த மதிப்பு 9.73 சதவீதமாக இருந்தது.

வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றின் விலைகள் குறைந்ததே பணவீக்கம் சற்றுக் குறைந்திருப்பதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. சிறிய அளவே குறைந்திருந்தாலும், நெருக்கடியில் இருக்கும் உற்பத்தி துறைக்கு இது நல்ல செய்தியாகவே கருதப்படுகிறது. ரிசர்வ் வங்கியின் நிதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதற்கும் இது வகை செய்யும் என்றும் கூறப்படுகிறது.

**மீன் குஞ்சு பொரிப்பகம் அமைக்க மானியம்**

First Published : 14 Dec 2011 10:40:20 AM IST

தேனி, டிச. 13: தேனி மாவட்டத்தில் தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தில் சொந்த நிலத்தில் மீன் குஞ்சு பொரிப்பகம் அமைக்க விரும்புவர்களுக்கு அரசு மானிய உதவி வழங்குகிறது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: 2 ஹெக்டேர் நிலத்தில் ஒரு கோடி நுண் மீன் குஞ்சுகள் பொரிக்கும் உற்பத்தித் திறன் கொண்ட மீன் குஞ்சு பொரிப்பகம் அமைக்கலாம். இதற்கான மொத்தச் செலவு ரூ.10 லட்சத்தில், ரூ.5 லட்சம் அரசு மானியமாக வழங்கப்படும்.

மீன்வளத் தொழில்நுட்பப் பட்டம் பெற்றவர்கள், சொந்த நிலமுள்ள மீன் வளர்ப்போர் ஆகியோர் இந்தத் திட்டத்தில் மானிய உதவி பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

இதுதொடர்பான விவரங்களை வைகை அணையில் உள்ள மீன்வள உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்று செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கரும்பு டன்னுக்கு ரூ.3,000: அரசுக்குக் கோரிக்கை**

First Published : 14 Dec 2011 01:14:58 PM IST

கள்ளக்குறிச்சி, டிச. 13: கரும்பு டன்னுக்கு ரூ.3,000 வழங்க வேண்டும் என செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கள்ளக்குறிச்சி ஏ.கே.டி. கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்டத்திற்கு சங்கத் தலைவர் ஆர்.குருநாதன் தலைமை வகித்தார். ஏ.வி.நாராயணப்பிள்ளை, எம்.ராமு, பி.டி.கண்ணன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மாநில பொருளாளர் எம்.சின்னப்பா பேசினார்.

எஸ்.ராமச்சந்திரன், ஆர்.பழநிவேல், ஏ.அய்யாசாமி, ஏ.லோகநாதன், ஜி.சத்தியமூர்த்தி, வாகன சங்க செயலாளர் ஜி.சீனுவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். செயலாளர் எம்.முகமது அலி நன்றி கூறினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

டிசம்பர் 30-ம் தேதிக்குள் அரசு புதிய விலையாக டன் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும். வெட்டுக் கூலியை அரசோ அல்லது ஆலை நிர்வாகமோ ஏற்க வேண்டும்.

கரும்பு வெட்டும் இயந்திரம் ஒரு ஆலைக்கு இரண்டு வீதம் அரசு வழங்க வேண்டும். 2004-05 முதல் எல்லா சர்க்கரை ஆலைக்கும் 5% லாப பங்கீடு வழங்க வேண்டும்.

இந்தத் தீர்மானங்களை வரும் 30-ம் தேதிக்குள் நிறைவேற்றாவிட்டால் ஜனவரி 2-ம் தேதி கள்ளக்குறிச்சியில் சாலைமறியல், கண்டனப் பேரணி நடத்தப்படும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

**கால்நடை பாதுகாப்பு இலவச பயிற்சி முகாம்**

First Published : 14 Dec 2011 10:30:21 AM IST

நாமக்கல், டிச. 13: கால்நடை பாதுகாப்பு குறித்த இலவச பயிற்சி முகாம் வரும் 20-ம் தேதி நாமக்கல்லில் நடைபெறுவதாக மாவட்ட வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 20-ம் தேதி (செவ்வாய்க்கிழமை) கறவைமாடுகளில் மடிவீக்கம், கோமாரி நோய் தடுப்பு மற்றும்மூலிகை வைத்திய சிகிச்சை முறைகள் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

பயிற்சியில் கறவைமாடுகளில் ஏற்படும் மடிவீக்க நோய், கோமாரி நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் குறித்தும், அதன் தாக்கம், நோய் தடுப்பு முறைகள் குறித்து விளக்கப்படுகிறது. மேலும்

மூலிகை மருத்துவத்தைப் பயன்படுத்தி இந்நோய்களை குணமாக்கும் முறைகள் பற்றி பயிற்சியில் விளக்கப்படுகிறது. பயிற்சி முகாமில் விவசாயிகள்,

பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் உள்ளிட்ட விருப்பமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரிலோ, தொலைபேசி மூலமாகவோ டிசம்பர் 19-ம் தேதிக்குள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோழிகளுக்கு வைட்டமின் நிறைந்த தீவனங்களை வழங்க வேண்டும்**

First Published : 14 Dec 2011 10:32:52 AM IST

நாமக்கல், டிச. 13: குளிர் காரணமாக கோழிகளுக்கு அதிக எரிசக்தியும், வைட்டமின் நிறைந்த தீவனங்களை வழங்க வேண்டும் என நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த மையம் வெளியிட்டுள்ள செய்தி:

வரும் 16-ம் தேதி வரை 3 நாட்களுக்கு வானம் லேசான மேக மூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பில்லை. காற்றின் வேகம் மணிக்கு 2 முதல் 3

கி.மீ வேகத்தில் தெற்கிலிருந்து வீசும். அதிகபட்ச வெப்பநிலை 86 முதல் 87.8 டிகிரி பாரன்ஹீட்டாக இருக்கும். குறைந்தபட்ச வெப்பநிலை 68 முதல் 71.6 டிகிரி பாரன்ஹீட்டாக இருக்கும்.

காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக 75 முதல் 89 சதவீதமும், குறைந்தபட்சமாக 54 முதல் 70 சதவீதமாகவும் இருக்கும்.

கோழிப்பண்ணையாளர்களுக்கான வானிலை: நாமக்கல் மாவட்ட வானிலையில் 3 நாள்களுக்கு வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும்.

மழை பெய்ய வாய்ப்பு குறைவு. இதன் காரணமாக பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் முறையே 87.8 டிகிரி பாரன்ஹீட், 68 டிகிரி பாரன்ஹீட் ஆகிய அளவுகளில் காணப்படும்.

பகல், இரவு வெப்ப அளவுகளால் கோழிகளின் தீவன எடுப்பு இயல்பாக இருக்கும்.

குளிர் காலத்திற்கு தகுந்தாற் போல், அதிக எரிசக்தி, அதிக வைட்டமின் டி3-யும் நிறைந்த தீவனங்களை கோழிகளுக்கு வழங்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் பயிற்சி தொடக்கம்**

First Published : 14 Dec 2011 11:03:30 AM IST

பெரம்பலூர், டிச. 13: பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயிகளுக்கு நெல் சாகுபடி தொடர்பான வேளாண் கருவிகள் குறித்த ஒரு வார பயிற்சி திங்கள்கிழமை தொடங்கியது.

வேளாண் பொறியியல் துறை சார்பில் நடைபெறும் பயிற்சியின் தொடக்க நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து வேளாண் இணை இயக்குநர் செ. சிவக்குமார் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதில் ஆர்வமுள்ள 20 விவசாயிகளுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் தங்களது விளைபொருள்களை சந்தைப் படுத்துதலில், அதிக லாபம் ஈட்டுவதே தேவையாக உள்ளது.

சந்தைப் படுத்துதலில் சரியான வசதிகள் இல்லாததால், இடைத் தரகர்களின் மூலம் ஏமாற்றப்பட்டு உழைப்புக்கேற்ற லாபம் பெறாமல் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இனிவரும் காலங்களில், விவசாயத்தை லாபகரமான தொழிலாக முன்னேற்ற வேண்டும். சாகுபடி செய்து கிடைக்கும் விளைபொருள்களை வேளாண் ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் மூலம் விற்பனை செய்து, அதிக லாபம் பெற வேண்டும்.

வேளாண் கருவிகளைப் பயன்படுத்த இதுபோன்ற பயிற்சிகளில் விவசாயிகள் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி, விவசாயத்தில் இயந்திரங்களின் பயன்பாட்டை நன்கு தெரிந்து கொண்டு பயன்பெற வேண்டும். மேலும், சிறு சிறு விவசாயிகள் குழுவாக சேர்ந்து விவசாயம் செய்து அதிக விளைச்சல் பெற முன்வர வேண்டும் என்றார் அவர்.

அரியலூர் மாவட்ட வேளாண் பொறியல் துறை செயற் பொறியாளர் இரா. மணி, திருந்திய நெல் சாகுபடியின் முக்கிய செயல்பாடான லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நிலம் சமன் செய்தல், பாய் நாற்றங்கால், தட்டு நாற்றங்கால் முறையில் நாற்று தயார் செய்தல், நடவு கருவியின் செயல்பாடு, களை எடுக்கும் கருவி கொண்டு எவ்வாறு களை எடுப்பது, நெல் அறுவடை இயந்திரத்தின் பயன்பாடு குறித்து விளக்கம் அளித்தார்.

பெரம்பலூர் மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் வே. செப்ந்தர்ராஜன், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 50 சத மானிய விலையில் கிடைக்கும் காய்கறி விதைகள், வீரிய ஒட்டு விதைகள், தோட்டக்கலைப் பயிர்களான ஓராண்டு, பல்லாண்டு பழப் பயிர்கள், மிளகாய், மஞ்சள், மலர்கள் சாகுபடி செய்வதற்கு 50 சதம் மானியத்தில் இடுபொருள்கள் வழங்கும் திட்டம் குறித்தும், மத்திய அரசின் திட்டமான ஒரு விவசாயிக்கு 4 ஹெக்டேர் நிலப்பரப்புக்கான மா, கொய்யா அல்லது 2 ஹெக்டேர் மஞ்சள், 2 ஹெக்டேர் மலர்கள் சாகுபடி திட்டத்துக்கான மானியம் குறித்தும் விளக்கினார்.

அதைத் தொடர்ந்து, பண்ணை மேலாளர் வீ. கருப்பசாமி, பாய் நாற்றங்காலில் செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

முன்னதாக, பெரம்பலூர் வேளாண் பொறியில் துறை உதவி செயற் பொறியாளர் வீ. ராஜேந்திரன் வரவேற்றார். ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. மாரிமுத்து நன்றி கூறினார்.

**தென்னை காப்பீட்டுத் திட்டத்தில் சேர விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்**

First Published : 14 Dec 2011 11:44:27 AM IST

தஞ்சாவூர், டிச. 13: தென்னைக் காப்பீட்டுத் திட்டத்தில் தென்னை விவசாயிகள் சேர்ந்து பயன்பெற விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து மாவட்ட பயிர்ப் பாதுகாப்புத் திட்ட ஒருங்கிணைப்பாளர் வ. பழனியப்பன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தஞ்சாவூர் மாவட்டத்தில் பதிவு செய்துள்ள 202 தென்னை விவசாயிகளில் 27 விவசாயிகள் இழப்பீடு பெற தகுதியுடையவர்களாக அறியப்பட்டு, இதுவரை 14 விவசாயிகளுக்கு ரூ. 1,17,140 வழங்கப்பட்டுள்ளது. மேலும் 13 விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க பரிசீலனையில் உள்ளது. இந்தத் திட்டத்தின்படி 4 முதல் 15 வயது வரையுள்ள மரம் ஒன்றுக்கு காப்பீட்டுத் தொகை ரூ. 600. மரம் ஒன்றுக்கு செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ரூ. 4.69. இதில் மானியம் போக செலுத்த வேண்டிய தொகை ரூ. 1.06 மட்டுமே. 16 முதல் 60 வயது வரையுள்ள மரங்களுக்கு காப்பீட்டுத் தொகை ரூ. 1,150. பிரிமீயம் ரூ. 6.35 மானியம் போக மரம் ஒன்றுக்கு விவசாயி செலுத்த வேண்டியத் தொகை ரூ. 1.44 மட்டுமே.

விவசாயி செலுத்தும் பிரீமியம், செலுத்திய மாதத்தின் அடுத்த மாதத்திலிருந்து ஒரு ஆண்டுக்கு மட்டுமே உரியதாகும். ஆண்டுதோறும் பதிவை புதுப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை அனைத்து வேளாண் உதவி மற்றும் தோட்டக் கலை அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 94437 80661 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**ஆப்ரிக்க நத்தைகள் படையெடுப்பு: விவசாய பயிர்கள் அழியும் அபாயம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,04:06 IST

தாம்பரம்: ஆப்ரிக்க நத்தைகளின் படையெடுப்பால், மாடம்பாக்கம் பகுதியில் மக்கள் பீதியடைந்துள்ளனர். மாடம்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட ஏ.எல்.எஸ்., நகர், காந்தி நகர்,

பாஸ்வநாத் அவென்யூ ஆகிய பகுதிகளில், 200க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இங்கு சில மாதங்களாக, ஆப்ரிக்க நத்தைகளின் படையெடுப்பு அதிகரித்துள்ளது. இதனால், மக்கள் பீதியடைந்துள்ளனர். சாதாரண நத்தையை விட வித்தியாசமாக உள்ளதால், அவற்றை அகற்றவும் அஞ்சுகின்றனர். ஆப்ரிக்க நத்தைகள் பிரவுன் மற்றும் வெள்ளைக் கோடுகள் கொண்டதாக இருக்கும். ஆண்டிற்கு 1,200 முட்டைகள் இடும். நான்கு முதல் ஒன்பது ஆண்டுகள் வரை வாழும். சிமென்ட், சுண்ணாம்பு மற்றும் 500 வகையான பயிர் வகைகளை இந்த நத்தைகள் உண்ணும். விவசாயத்தை பாதிக்கக்கூடிய உயிரினங்களின் வரிசையில், ஆப்ரிக்க நத்தைகள் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளன.கேரளாவில், 29 மாவட்டங்களில் இந்த நத்தைகள் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்த நத்தைகள் இந்தியாவிற்கு எப்படி வந்தன என்பது குறித்து ஆராய்ச்சி நடந்து வருகிறது.

உப்பு, புகையிலைத் தூள் (மூக்குப்பொடி, சிகரெட் தூள்) சோடியம் ஆக்சைடு மற்றும் குளோரைன் போன்ற பொடிகளை நத்தையின் மீது தூவ வேண்டும். இவற்றை கையால் தொடக்கூடாது. இந்த நத்தைகளை சாப்பிட்டால், மெனிங்க்டஸ் என்னும் தோல் நோய் உண்டாகிறது. இதை சாப்பிடும் ரேபிஸ் தொற்று உள்ள நாய்களுக்கு வேகமாக நோய் பரவும்.

பேரூராட்சி செயல் அலுவலர் கேசவன் கூறுகையில், "ஏ.எல்.எஸ்., நகரில் உள்ள ஒரு தோட்டத்தில் இருந்து ஆப்ரிக்க நத்தைகள் அதிகளவில் அருகேயுள்ள குடியிருப்புகளில் புகுந்து விடுகின்றன. இவற்றை அழிக்கும் பணியில் பேரூராட்சி ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இதுவரை, 10 ஆயிரம் நத்தைகள் அழிக்கப்பட்டுள்ளன' என்றார்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் விவசாயிகள் சேர இன்று கடைசிநாள்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,01:47 IST

கருத்தை பதிவு செய்ய

திருச்சி : விவசாய இன்சூரன்ஸ் நிறுவன மண்டல மேலாளர் அன்பரசு வெளியிட்ட அறிக்கை:தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் சம்பா நெற்பயிருக்கு கடன் பெறாத விவசாயிகள் சேர இன்று கடைசி நாளாகும்.விவசாயிகள் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் கூட்டுறவு வங்கியிலோ, வர்த்தக வங்கியிலோ தேவையான பயிர் சாகுபடி ஆதாரங்களுடன் திட்டத்திற்கான முன்மொழிவு படிவத்தை பூர்த்தி செய்து பிரிமீயத்துடன் செலுத்த வேண்டும்.சிறு

மற்றும் குறு விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு சாதாரண பிரீமியமாக ரூ.75ம், கூடுதல் பிரீமியமாக ரூ.75ம், கூடுதல் பிரீமியமாக ரூ.441ம் செலுத்த வேண்டும். மற்ற விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு சாதாரண பிரீமியமாக ரூ.83ம், கூடுதல் பிரீமியமாக ரூ.490ம் செலுத்த வேண்டும்.மேலும் விவரங்களுக்கு சென்னையில் உள்ள விவசாய இன்சூரன்ஸ் கம்பெனியை 044-43403401-18 என்ற ஃபோன் எண்களிலும், 1800-103-6565 என்ற கட்டணமில்லா ஃபோனிலும் தொடர்பு கொள்ளலாம்.

**தமிழக அரசு உயர்த்திய கொள்முதல் விலை கிடைக்கவில்லை; பால் உற்பத்தியாளர் புகார்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,01:50 IST

கரூர் : தமிழகத்தில் சமீபத்தில் உயர்த்திய பாலுக்கான கொள்முதல் விலை தராமல் கூட்டுறவு சங்க அதிகாரிகள் இழுதடிப்பதாக பால் உற்பத்தியாளர்கள் தரப்பில் இருந்து புகார் எழுந்துள்ளது.கரூர் மாவட்டத்தில் 180 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. அதில், பதிவு செய்யப்பட்ட 143 சங்கங்கள் மூலமாக 32 ஆயிரம் உறுப்பினர்கள் பால் விற்பனை செய்து வருகின்றனர். நாள்தோறும் 61 ஆயிரம் லிட்டர் பால் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகள் வழங்கி வருகின்றனர். பாலை விற்பனை செய்யும் உற்பத்தியாளர்களுக்கு 10 முதல் 30 நாட்களுக்கு ஒருமுறை பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.கரூர் மாவட்டத்தில் தோரணக்கல்பட்டியில் முதன்மை பால் குளிரூட்டும் நிலையமும், தரகம்பட்டி மற்றும் தாளியம்பட்டியில் தொகுப்பு பால் குளிரூட்டும் நிலையமும் செயல்பட்டு வருகிறது. மூன்றாவதாக மஞ்ச நாயக்கன்பட்டியில் 25 லட்ச ரூபாய் செலவில் பால் குளிரூட்டும் மையத்துக்கான பணிகள் நடந்து வருகிறது.கடந்த மாதம் 17 ம் தேதி வரை பால் உற்பத்தியாளருக்கு பசும்பாலுக்கு லிட்டருக்கு 18 ரூபாயும், எருமை பாலுக்கு 26 ரூபாயும் தமிழக அரசு தரப்பில் வழங்கப்பட்டது. இந்த நிலையில் கடந்த 18ம் தேதி முதல் பசும்பாலுக்கு 20 ரூபாயும், எருமை பாலுக்கு 26 ரூபாயும் உயர்த்தி வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்தது.பால் உற்பத்தியாளர்கள் கூறுகையில், ""பாலுக்கான கொள்முதல் விலையை அரசு உயர்த்தி 25 நாட்கள் ஆகிவிட்டது. ஆனால், பசும்பால் மற்றும் எருமை பாலுக்கு அதிகரிக்கப்பட்ட கொள்முதல் விலையை கூட்டுறவு சங்க அதிகாரிகள் உயர்த்தி வழங்காமல் இழுத்தடிக்கின்றனர்,'' என்றனர்.இதுகுறித்து கரூர் மாவட்டத்தை சேர்ந்த ஆவின் பால் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:உற்பத்தியாளர்கள் வழங்கும் பசும்பாலில் 4.3 கொழுப்பு சத்தும், 8.2 இதரசத்துகளும், எருமைபாலில் 7 சதவீத கொழுப்பு சத்தும், 8.8 இதர சத்துகளும் இருக்க வேண்டும். அப்போதுதான், அரசு நிர்ணயம் செய்துள்ள கூடுதல் விலையை வழங்க முடியும். சில உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பாலில் அரசு நிர்ணயம் செய்துள்ள தரம் இல்லாததால், குறைந்த விலைதான் வழங்க

முடியும்.பசும்பாலில் 4.3 சதவீதத்துக்கு மேல் இருந்தால், குறிப்பாக கொழுப்புச்சத்து 5 சதவீதத்தை தாண்டினால் அதிக விலை உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. பாலில் உள்ள கொழுப்பு சத்து மற்றும் இதர சத்துக்களை துல்லியமாக அறிய இ.எம்.டி., எலெக்ட்ரானிக் முறை பயன்படுத்தப்படுகிறது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**நாளை குறைதீர் கூட்டம் விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,01:50 IST

கருத்தை பதிவு செய்ய

கரூர் : "தாந்தோணியில் விவசாயிகளின் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை (16ம் தேதி) நடக்கிறது' என வட்டார வேளாண் உதவி இயக்குனர் கவிதா அறித்துள்ளார்.அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது:விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் பயிர் உற்பத்தி திறனை அதிகரித்து, அவர்களின் வருமானத்தை இரு மடங்காக அதிகரிக்க தமிழக அரசு பசுமைப்புரட்சி திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

விவசாயிகளுக்கு பயிர் விØ ளச்சல் மற்றும் அனைத்துத்துறை சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கி, குறைகளை நிவர்த்தி செய்யும் வØ கயில் உரிய நடவடிக்கை எடு க்க தாந்தோணி வட்டார வே ளாண் விரிவாக்க மையத்தில் வேளாண்மை பொறியியல் செயற்பொறியாளர் தலைமையில் நாளை காலை 11 ம ணி க்கு விவசாயிகளின் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது.கூட்டத்தில் வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகத் துறை, பட்டு வளர்ச்சி துறை, வனத்துறை, வருவாய் துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடைத்துறை மற்றும் மின்சார வாரியம் ஆகிய துறை அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகளின் குறைகளை பதிவு செய்து நடவடிக்கை எடுக்க உள்ளனர். ஆகவே, தாந்தோணி வட்டார விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று பயனடையலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**முந்திரி பயிர் குறித்த சர்வதேச கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,01:43 IST

கருத்தை பதிவு செய்ய

மேலூர்: உலக நாடுகளின் விஞ்ஞானிகள், உற்பத்தியாளர்கள் கலந்து கொண்ட முந்திரி பயிர் குறித்த கருத்தரங்கம் ஒத்தக்கடை விவசாய கல்லூரியில் நடந்தது. முந்திரி சாகுபடி, அதன் தொழில் நுட்பங்கள், பதப்படுத்துதல், மதிப்பீட்டு பொருட்களாக தயாரித்தல் குறித்த சர்வதேச கருத்தரங்கம்

பெரியகுளம் தோட்டக்கலை முன்னாள் முதல்வர் சம்பந்தமூர்த்தி தலைமையில் நடந்தது. விவசாய கல்லூரி முதல்வர் வைரவன் வரவேற்றார். இத்தாலி, கலிபோர்னியா, ருவாண்டா, கென்யா, கானா, கியூபா, இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து தமிழகம், கேரளா, மத்திய பிரதேசம், மேற்கு வங்கம், ஜார்க்கண்ட் மாநிலங்களை சேர்ந்த விஞ்ஞானிகள், வர்த்தகர்கள், சாகுபடியாளர்கள், வணிகர்கள் இதில் கலந்து கொண்டனர். முந்திரி பயிர் குறித்த ஆய்வு கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டன. சிறந்த ஆய்வு கட்டுரைக்கு அமெரிக்க தோட்டகலை விஞ்ஞானி கேல் மெக்கிரான் விருதுகளை வழங்கினார். கென்யா விஞ்ஞானி மனியானியா, கோவை வேளாண் கல்லூரி முன்னாள் முதல்வர் இருளப்பன், பெரியகுளம் தோட்டகலை கல்லூரி முதல்வர் பொன்னுசாமி சிறப்புரை ஆற்றினர். இத்துறையில் டாக்டர் பட்டம் பெற்ற ஜீவா, அனீசாராணி, இப்ராஹிம், கிருஷ்ணமூர்த்தி உரையாற்றினர். பேராசிரியர்கள் சுந்தரம், ஆறுமுகம், குமார், சாலிகா நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். தோட்டகலை துறை தலைவர் மாரியப்பன் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு உரமானியம் நேரடியாக வழங்க ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,00:25 IST

ராமநாதபுரம் : அடுத்தாண்டு முதல் விவசாயிகளுக்கு உரமானியத்தை நேரடியாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்பட்ட உர மானியம் 2010க்கு பின், உர தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டது. உடனே உரங்களின் விலையும் குறைந்தது. நடப்பாண்டு மானியம் வழங்குவதை அரசு நிறுத்தியது, உரக்கம்பெனிகளே விலை நிர்ணயம் செய்துகொள்ள அனுமதித்தது.இதனால், எப்போதும் இல்லாத அளவு, இந்தாண்டு உரங்களின் விலை பன்மடங்கு உயர்ந்தது. கடந்தாண்டு 517 ரூபாய் இருந்த "டி.ஏ.பி.,' 925 ரூபாய் ஆனது. யூரியா வெளி மார்க்கெட்டில், 500 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதனால் விவசாயம் செய்ய முடியாமல், பலர் தங்கள் நிலத்தை தரிசாக போட்டு வருகின்றனர். விவசாயத்துக்கு ஊக்கமூட்டும் வகையில், உர மானியத்தை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இதையொட்டி அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளும், சென்னை தலைமை கூட்டுறவு வங்கியில் கணக்கு துவங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.இந்த சேவை கிராமத்தில் உள்ள வங்கியையும் சென்றடைய வேண்டும் என்பதால், அனைத்து வங்கிகளுக்கும் "கோர்-பேங்கிங்' வசதி செய்யப்பட உள்ளது. இதற்காக ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**விதைக்க இடமின்றி டன் கணக்கில் பனங்கொட்டைகள் தேக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,00:24 IST

கீழக்கரை :ராமநாதபுரம் மாவட்டத்தில் பனங்கிழங்குகள் உற்பத்தி செய்ய விளைநிலங்கள் கிடைக்காமல் பனங்கொட்டைகள் டன் கணக்கில் குவிந்துள்ளது. இவற்றை, செங்கல் சூளைக்கு பயன்படுத்த வெளி மாவட்ட வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர்.ராமநாதபுரம் மாவட்டத்தில் ரெகுநாதபுரம், காரான், கும்பரம், வண்ணாங்குண்டு, சக்திபுரம், சின்னாண்டி வலசை உள்ளிட்ட ஏராளமான கிராமங்களில் பனங்கிழங்கு உற்பத்தி செய்யும் பணியில் ஆயிரக்கணக்கானோர் ஈடுபட்டுள்ளனர். கடந்த காலங்களில் காலி விளை நிலங்கள் அதிகமாக இருந்தது. தொழிலாளர்களும் ஆர்வத்துடன் பணிக்கு வந்தனர். இதனால் இந்த பகுதியில் தேவைக்கு அதிகமாக பனங்கிழங்கு விளைவிக்கப்பட்டது. வெளி மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டன. சில ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களால், இந்த தொழிலில் பணி புரிய ஆட்கள் கிடைக்கவில்லை.

பெரும்பாலான விளை நிலங்கள் வீட்டடி மனைகளாக மாறிவிட்டன. விதைக்க முடியாமல் பனங்கொட்டைகள் டன் கணக்கில் தேங்கின. இதையறிந்த வெளி மாவட்ட செங்கல் சூளை உரிமையாளர்கள், செங்கல் சூளையில் பயன்படுத்துவதற்காக பனங்கெட்டைகளை வாங்கி செல்கின்றனர்.

சங்கன்வலசை விவசாயி என்.முனியாண்டி கூறியதாவது:

ஆடி, ஆவணியில் கொட்டைகள் போட்டு விடுவோம். பல இடங்களில் மூடிய கொட்டைகளை தோண்டி எடுக்க ஆளில்லாமல் பூமிக்குள் அழுகி விடும் நிலை ஏறப்ட்டுள்ளது.

இந்த தொழிலில் ஈடுபட்ட பலர் மாற்று தொழிலுக்கு சென்று விட்டதால் தேக்கம் அடைந்துள்ளது. கொட்டைகள் செங்கல் சூளைக்கு ஒரு டன் ரூ.1500 முதல் 2000 வரை விற்பனை செய்யப்படுகிறது. வழக்கத்தை விட நடப்பாண்டில் பனங்கிழங்கு வரத்து குறைவாக இருக்கும், என்றார்.

**உரச் செலவு குறையுமா விவசாயிகளுக்கு ஆலோசனை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,00:02 IST

வேடசந்தூர் : விவசாயிகள் உரச் செலவை குறைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.வேளாண் உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியன் கூறியது: அதிக அளவில் உரம் இடுவதால் பயன் இல்லை. உரம் இடுவதற்கு இலை வண்ண அட்டையை பயன் படுத்தவும். இதை உபயோகிக்கும் முறை: நெல் நட விற்கு பின், 14 நாட்கள் கழித்தும், நேரடி ஈர விதைப்புக்கு விதைத்த 21 நாட்களுக்கு பிறகும்,

கடைசியாக பயிர் பூக்க துவங்கும் போதும் அளவு எடுக்கவும். (குறுவை பயிருக்கு ஏழு நாட்களுக்கு ஒரு முறையும், சம்பா தாளடி பயிருக்கு 10 நாட்களுக்கு ஒரு முறையும்).ஒவ்வொரு முறையும் ,ஒரு குறிப்பிட்ட நேரத்தில், இலையை மறைத்தவாறும் அளவுகள் எடுக்கவும். பயிர் எண்ணிக்கை சரியாக உள்ள பகுதியில் நோய், பூச்சி தாக்காத குத்துக்களை 10 எண்ணிக்கை தேர்வு செய்ய வேண்டும். இதில் இளமையான முழுவதும் விரிந்த ஒரு இலையின் நிறத்தை, இலையை பறிக்காமல் அட்டையின் வண்ணப் பட்டைகளின் மையப்பகுதியில் வைத்து நிறத்தை ஒப்பிட்டு பார்க்கவும்.பரிந்துரைக்கப்பட்ட ஒப்பீட்டு வண்ண அளவு, பொன்னி ரகத்தில் "3 'க்கு கீழ்; மற்ற ரகங்களில் "4' க்கு கீழ் இருந்தால் தழைச் சத்து இட வேண்டும். நடவு நெல்லுக்கும், நேரடி விதைப்பு நெல்லுக்கும், இந்த பரிந்துரை போதுமானது. விபரங்களுக்கு வேளாண் விரிவாக்க மையத்தை அணுகவும், என்றார்.

**விவசாயிகளுக்கு உரமானியம் நேரடியாக வழங்க ஏற்பாடு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,00:25 IST

கருத்தை பதிவு செய்ய

ராமநாதபுரம் : அடுத்தாண்டு முதல் விவசாயிகளுக்கு உரமானியத்தை நேரடியாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்பட்ட உர மானியம் 2010க்கு பின், உர தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டது. உடனே உரங்களின் விலையும் குறைந்தது. நடப்பாண்டு மானியம் வழங்குவதை அரசு நிறுத்தியது, உரக்கம்பெனிகளே விலை நிர்ணயம் செய்துகொள்ள அனுமதித்தது.இதனால், எப்போதும் இல்லாத அளவு, இந்தாண்டு உரங்களின் விலை பன்மடங்கு உயர்ந்தது. கடந்தாண்டு 517 ரூபாய் இருந்த "டி.ஏ.பி.,' 925 ரூபாய் ஆனது. யூரியா வெளி மார்க்கெட்டில், 500 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இதனால் விவசாயம் செய்ய முடியாமல், பலர் தங்கள் நிலத்தை தரிசாக போட்டு வருகின்றனர். விவசாயத்துக்கு ஊக்கமூட்டும் வகையில், உர மானியத்தை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இதையொட்டி அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளும், சென்னை தலைமை கூட்டுறவு வங்கியில் கணக்கு துவங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.இந்த சேவை கிராமத்தில் உள்ள வங்கியையும் சென்றடைய வேண்டும் என்பதால், அனைத்து வங்கிகளுக்கும் "கோர்-பேங்கிங்' வசதி செய்யப்பட உள்ளது. இதற்காக ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**விதைக்க இடமின்றி டன் கணக்கில் பனங்கொட்டைகள் தேக்கம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,00:24 IST

கீழக்கரை :ராமநாதபுரம் மாவட்டத்தில் பனங்கிழங்குகள் உற்பத்தி செய்ய விளைநிலங்கள் கிடைக்காமல் பனங்கொட்டைகள் டன் கணக்கில் குவிந்துள்ளது. இவற்றை, செங்கல் சூளைக்கு பயன்படுத்த வெளி மாவட்ட வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர்.ராமநாதபுரம் மாவட்டத்தில் ரெகுநாதபுரம், காரான், கும்பரம், வண்ணாங்குண்டு, சக்திபுரம், சின்னாண்டி வலசை உள்ளிட்ட ஏராளமான கிராமங்களில் பனங்கிழங்கு உற்பத்தி செய்யும் பணியில் ஆயிரக்கணக்கானோர் ஈடுபட்டுள்ளனர். கடந்த காலங்களில் காலி விளை நிலங்கள் அதிகமாக இருந்தது. தொழிலாளர்களும் ஆர்வத்துடன் பணிக்கு வந்தனர். இதனால் இந்த பகுதியில் தேவைக்கு அதிகமாக பனங்கிழங்கு விளைவிக்கப்பட்டது. வெளி மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டன. சில ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களால், இந்த தொழிலில் பணி புரிய ஆட்கள் கிடைக்கவில்லை.

பெரும்பாலான விளை நிலங்கள் வீட்டடி மனைகளாக மாறிவிட்டன. விதைக்க முடியாமல் பனங்கொட்டைகள் டன் கணக்கில் தேங்கின. இதையறிந்த வெளி மாவட்ட செங்கல் சூளை உரிமையாளர்கள், செங்கல் சூளையில் பயன்படுத்துவதற்காக பனங்கெட்டைகளை வாங்கி செல்கின்றனர்.

சங்கன்வலசை விவசாயி என்.முனியாண்டி கூறியதாவது:

ஆடி, ஆவணியில் கொட்டைகள் போட்டு விடுவோம். பல இடங்களில் மூடிய கொட்டைகளை தோண்டி எடுக்க ஆளில்லாமல் பூமிக்குள் அழுகி விடும் நிலை ஏறப்ட்டுள்ளது.

இந்த தொழிலில் ஈடுபட்ட பலர் மாற்று தொழிலுக்கு சென்று விட்டதால் தேக்கம் அடைந்துள்ளது. கொட்டைகள் செங்கல் சூளைக்கு ஒரு டன் ரூ.1500 முதல் 2000 வரை விற்பனை செய்யப்படுகிறது. வழக்கத்தை விட நடப்பாண்டில் பனங்கிழங்கு வரத்து குறைவாக இருக்கும், என்றார்.

**ஆப்ரிக்க நத்தைகள் படையெடுப்பு: விவசாய பயிர்கள் அழியும் அபாயம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,04:06 IST

தாம்பரம்: ஆப்ரிக்க நத்தைகளின் படையெடுப்பால், மாடம்பாக்கம் பகுதியில் மக்கள் பீதியடைந்துள்ளனர். மாடம்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட ஏ.எல்.எஸ்., நகர், காந்தி நகர், பாஸ்வநாத் அவென்யூ ஆகிய பகுதிகளில், 200க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இங்கு சில

மாதங்களாக, ஆப்ரிக்க நத்தைகளின் படையெடுப்பு அதிகரித்துள்ளது. இதனால், மக்கள் பீதியடைந்துள்ளனர். சாதாரண நத்தையை விட வித்தியாசமாக உள்ளதால், அவற்றை அகற்றவும் அஞ்சுகின்றனர். ஆப்ரிக்க நத்தைகள் பிரவுன் மற்றும் வெள்ளைக் கோடுகள் கொண்டதாக இருக்கும். ஆண்டிற்கு 1,200 முட்டைகள் இடும். நான்கு முதல் ஒன்பது ஆண்டுகள் வரை வாழும். சிமென்ட், சுண்ணாம்பு மற்றும் 500 வகையான பயிர் வகைகளை இந்த நத்தைகள் உண்ணும். விவசாயத்தை பாதிக்கக்கூடிய உயிரினங்களின் வரிசையில், ஆப்ரிக்க நத்தைகள் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளன.கேரளாவில், 29 மாவட்டங்களில் இந்த நத்தைகள் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்த நத்தைகள் இந்தியாவிற்கு எப்படி வந்தன என்பது குறித்து ஆராய்ச்சி நடந்து வருகிறது.
உப்பு, புகையிலைத் தூள் (மூக்குப்பொடி, சிகரெட் தூள்) சோடியம் ஆக்சைடு மற்றும் குளோரைன் போன்ற பொடிகளை நத்தையின் மீது தூவ வேண்டும். இவற்றை கையால் தொடக்கூடாது. இந்த நத்தைகளை சாப்பிட்டால், மெனிங்க்டஸ் என்னும் தோல் நோய் உண்டாகிறது. இதை சாப்பிடும் ரேபிஸ் தொற்று உள்ள நாய்களுக்கு வேகமாக நோய் பரவும்.
பேரூராட்சி செயல் அலுவலர் கேசவன் கூறுகையில், "ஏ.எல்.எஸ்., நகரில் உள்ள ஒரு தோட்டத்தில் இருந்து ஆப்ரிக்க நத்தைகள் அதிகளவில் அருகேயுள்ள குடியிருப்புகளில் புகுந்து விடுகின்றன. இவற்றை அழிக்கும் பணியில் பேரூராட்சி ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இதுவரை, 10 ஆயிரம் நத்தைகள் அழிக்கப்பட்டுள்ளன' என்றார்.

**மரவள்ளி கிழங்குக்கு விலை நிர்ணயம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,02:29 IST

ஆத்தூர்:"மரவள்ளி கிழங்குக்கு, தமிழக அரசு விலை நிர்ணயம் செய்து கொடுக்க வேண்டும்'என, விவசாயிகள், சேகோ உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்தியளவில், 2.50 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் மரவள்ளி பயிரிடப்படுகிறது. அதில், தமிழகத்தில் சேலம், ஆத்தூர், விழுப்புரம், நாமக்கல், ஈரோடு, தர்மபுரி, கரூர், கடலூர் உள்ளிட்ட, 18 மாவட்டங்களில், 1.8 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.
மரவள்ளி கிழங்கில் இருந்து, உற்பத்தி செய்யப்படும் ஸ்டார்ச், ஜவ்வரிசியை வடமாநிலங்களில், 90 சதவீதம் உணவு தயாரிப்புகளுக்கும், குளுக்கோஸ், மருந்து போன்றவைகளுக்கு, 10 சதவீதம் பயன்படுத்தப்படுகிறது. சேலம், ஆத்தூர், நாமக்கல், சின்னசேலம் பகுதியில், ஜவ்வரிசி தயாரிப்பில், 200 சேகோ ஆலைகளும், 160 ஸ்டார்ச் மாவு தயாரிப்பு ஆலைகள் என, மொத்தம் 420க்கும் மேற்பட்ட சேகோ தொழிற்சாலைகள் உள்ளன. சேலத்திலிருந்து நாள்தோறும்

வடமாநிலங்களுக்கு, 300 லோடுகள் விற்பனைக்கு அனுப்பபடுகின்றன.
கடந்த 2007- 08ல் ஜவ்வரிசி மூட்டை, 1,489 ரூபாயும், ஸ்டார்ட் மூட்டை, 987 ரூபாயும், 2008-09ல் ஜவ்வரிசி, 1,640 ரூபாய், ஸ்டார்ச், 1,168 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. 2009 நவம்பரில், ஜவ்வரிசி (90 கிலோ) மூட்டை, 3,018 ரூபாய், ஸ்டார்ச் மூட்டை, 2,096 ரூபாய் வரை விற்பனையானது. 2010 ஜனவரி மாதம் ஜவ்வரிசி மூட்டை, 5,242 ரூபாய், ஸ்டார்ச், 3,160 ரூபாய் என, விலை உயர்ந்தது. ஜூன் மாதம் ஜவ்வரிசி மூட்டை, 3,910 ரூபாய், ஸ்டார்ச், 2,862 ரூபாய் என, விலை வீழ்ச்சியடைந்தது. தற்போது, ஸ்டார்ச் மூட்டை, 1,500 ரூபாய், ஜவ்வரிசி, 2,500 முதல், 2,800 ரூபாய் வரை விலை உள்ளது.

மேலும், இரு ஆண்டுகளுக்கு முன் மரவள்ளி கிழங்குகள் மூட்டை, 600 ரூபாய் வரை விற்பனை இருந்தது. தற்போது, 150 முதல், 220 ரூபாய் என, மரவள்ளி கிழங்கு கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. சமீபகாலமாக ஜவ்வரிசி, ஸ்டார்ச், "பளீச்' என இருப்பதற்காக, ரசாயனம் கலந்து வந்ததால், விற்பனை தேக்கமடைந்து வருவதாக புகார் எழுந்துள்ளது. அதனால், சேகோ தொழில் அழிந்து வருவதோடு, வியாபாரிகளுக்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. தவிர, சேலம் சேகோ சர்வில், 1.25 லட்சம் ஜவ்வரிசி மூட்டைகள் தேக்கமடைந்துள்ளது.ஜவ்வரிசி, ஸ்டார்ச் மற்றும் மரவள்ளி கிழங்கு விலையும் கடும் வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் மற்றும் சேகோ உற்பத்தியாளர்கள் கடும் வேதனையடைந்துள்ளனர்.

ஆத்தூர் மரவள்ளி விவசாயிகள் கூறியதாவது:
மரவள்ளி கிழங்கு, பத்து மாதப் பயிராகும். அதில், ஏக்கருக்கு, 150 மூட்டை என, 12 டன் வரை கிழங்கு உற்பத்தி இருந்தால், மூட்டை (75 கிலோ) சாரசரி, 200 ரூபாய் வீதம் டன்னுக்கு, 3,000 ரூபாய் வரை விற்பனை உள்ளது. மரவள்ளி கிழங்கிற்கு, தமிழக அரசு நிர்ணய விலை வழங்க வேண்டும். அவ்வாறு, நிர்ணய விலை வழங்கினால் மட்டுமே மரவள்ளி சாகுபடி விவசாயிகளுக்கு பலனுள்ளதாக இருக்கும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

ஆத்தூர் சேகோ, ஸ்டார்ச் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் செல்வமணி கூறியதாவது:
ஜவ்வரிசி, ஸ்டார்ச் விலை சரிந்துள்ளதால், உற்பத்தியாளர்கள் மிகவும் வேதனையடைந்தள்ளனர். தொடரும் மின்வெட்டு காரணமாக, ஸ்டார்ச், ஜவ்வரிசி குறைந்தளவில் மட்டுமே உற்பத்தி செய்ய முடிகிறது. ஆண்டுக்கு, 1,300 கோடி ரூபாய் வருவாய் பெறும் சேகோ தொழில், மரவள்ளி மற்றும் சேகோ விலை வீழ்ச்சி காரணமாக, அழிவின் விழிம்பில் உள்ளது. மத்திய, மாநில அரசுகள் வெளி நாடுகளில் இருந்து ஜவ்வரிசி இறக்குமதி செய்யாமல், உள்நாட்டு ஜவ்வரிசி, ஸ்டார்ச் மற்றும் மரவள்ளிக்கு உரிய விலை வழங்க வேண்டும். இத்தொழிலை நம்பியுள்ள, 5 லட்சம் விவசாயிகள்,

கூலித் தொழிலாளர்கள், சேகோ உற்பத்தியாளர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**மஞ்சள் ஏலத்தில் வியாபாரிகள் "சிண்டிகேட்'கூட்டுறவு சங்க அதிகாரிகள் உடந்தை: விவசாயிகள் புகார்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 15,2011,02:39 IST

நாமக்கல் :நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், வியாபாரிகள் தங்களுக்குள், "சிண்டிகேட்' அமைத்துக் கொள்வதால், மஞ்சளுக்கு உரிய விலை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கு, கூட்டுறவு சங்க அதிகாரிகள் உடந்தையாக செயல்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.
நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை-ஆத்தூர் மெயின் ரோட்டில், ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் உள்ளது. அங்கு, ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமையன்று, மஞ்சள் ஏலம் நடக்கும். ஈரோடு மஞ்சள் மண்டிக்கு அடுத்தபடியாக, இங்கு, மஞ்சளுக்கு நல்ல விலை கிடைப்பது வழக்கம்.
அதனால், நாமக்கல் மட்டுமின்றி, சேலம், ஆத்தூர், ஈரோடு, திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். தற்போது, மஞ்சள் சீஸன் என்பதால், வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு, மஞ்சள் வரத்து அதிகரித்துள்ளது.
இந்நிலையில், நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு கொண்டுவரப்படும் மஞ்சளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என, குற்றச்சாட்டு எழுந்துள்ளது. வியாபாரிகள், "சிண்டிகேட்' அமைத்து, மஞ்சளுக்கான விலையை குறைத்து நிர்ணயம் செய்வதாகவும், விவசாயிகள் குற்றச்சாட்டு எழுப்பியுள்ளனர்.
இதுகுறித்து மஞ்சள் விவசாயிகள் சிலர் கூறியதாவது:
உருண்டை, விரலி மஞ்சளுக்கு, சேலத்தில் நல்ல விலை கிடைக்கிறது. நாமகிரிப்பேட்டை விற்பனைச் சங்கத்தில், மஞ்சளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. தற்போது சீஸன் சமயம் என்பதால், சேலம், ஆத்தூர், ஈரோடு உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து மஞ்சள் வரத்து அதிகரித்துள்ளது.
எனினும், மஞ்சளுக்கு உரிய விலை கிடைக்காதது, மஞ்சள் விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தவிர, விவசாயிகளுக்கு, மஞ்சளை கொண்டுவரும் வாடகை செலவுகூட மிஞ்சாத நிலை உள்ளது. வியாபாரிகள், தங்களுக்குள் "சிண்டிகேட்' அமைத்துக்கொண்டு மஞ்சளுக்கான விலையை குறைக்கின்றனர். அதற்கு, சங்க அதிகாரிகள் உடந்தையாக

இருப்பதால், மஞ்சளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. இதே நிலை தொடர்ந்தால், மஞ்சள் விவசாயிகள் கடும் பாதிப்பிற்குள்ளாவர். இதை, கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு கூறினர்.

**விவசாயிகள் கணக்கெடுப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 14,2011,23:21 IST

கோவை : மதுக்கரை வட்டார விவசாயிகள், உதவி வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு, தங்களை பற்றிய விவரங்களை பதிவு செய்து கொள்ளலாம், என அறிவிக்கப்பட்டுள்ளது.
மதுக்கரை வட்டார வேளாண்மை உதவி இயக் குனர் தமிழ்செல்வி வெளியிட்டுள்ள அறிக்கை: மதுக்கரை வட்டாரத்துக்கு உட்பட்ட 19 வருவாய் கிராமங்களில் உள்ள சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள் பற்றிய விவரம், கணக்கெடுக்கப்பட்டு வருகிறது; கணக்கெடுப்பு விவரம், கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்படுகிறது.

வேளாண் துறை மூலம் மண் மாதிரி எடுக்கும் பணி முடிந்தவுடன், மண் வள அட்டை தயார் செய்து, அந்தந்த விவசாயிகள் பெயரில் பதிவு செய்து அளிக்கப்படும். எனவே, மதுக்கரை வட்டார விவசாயிகள் அனைவரும், தங்கள் பகுதி வட்டார உதவி வேளாண் அலுவலர்களை தொடர்பு கொண்டு, கணக்கெடுப்பு பணிக்கு உதவும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பகுதி வாரியாக, விவசாயிகள் தொடர்பு கொள்ள வேண்டிய போன் எண்கள் விவரம்: மதுக்கரை, சீரபாளையம்: 9952479800, வழுக் குப்பாறை, திருமலையம்பாளையம்: 9486913749, பிச்சனூர், எட்டிமடை, மாவுத்தம்பதி: 9976064292, நாச்சிபாளையம், பாலத்துறை, அரிசிபாளையம், மயிலேறிபாளையம், கருஞ்சாமிகவுண்டம் பாளை யம், தம்பாகவுண்டம்பாளையம்: 9842485899, ஒத்தக்கால் மண்டபம், செட்டிபாளையம், ஓராட்டுக்குப்பை, வெள்ளலூர் : 9791659930 ஆகிய எண்களிலும், வட்டார வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை 0422-2623275 என்ற போன் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு, அவர் தெரிவித்துள்ளார்.

தினகரன்

**மஞ்சள் விவசாயிகளுக்கு வருமான வரி நோட்டீஸ்**

பதிவு செய்த நாள் : 12/15/2011 12:29:57 AM



ஈரோடு : மஞ்சள் விவசாயிகளுக்கு வருமான வரித் துறை அதிகாரிகள் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர். கடந்த 2008 முதல் 2010 வரை மஞ்சளுக்கு அதிக விலை கிடைத்தது. ஈரோடு மாவட்டத்தில் ஏராளமான விவசாயிகள் மஞ்சள் பயிரிட்டிருந்தனர். அப்போது, மஞ்சள் மூலம் வருமானம் வந்ததாக விவசாயிகள் அல்லாத சிலர் வருமான வரித் துறையில் கணக்கு காட்டி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஈரோட்டை சேர்ந்த சில தொழிலதிபர்கள் தங்களுக்கு விவசாயம் மூலம் வருமானம் கிடைத்ததாக போலியான ஆவணங்களை தயாரித்து, வருமான வரித் துறையிடம் சமர்ப்பித்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

குறிப்பாக மஞ்சள் அதிகப்படியான விலைக்கு விற்ற காலகட்டத்தில் இதுபோன்ற மோசடிகள் நடந்திருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். இதை கண்டுபிடிக்க, ஈரோடு விவசாயிகள், உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சந்தைப்படுத்தும் சங்கத்தில் 2008&2009ம் நிதியாண்டில் மஞ்சள் விற்ற 300க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

அதில் விவசாயி பெயர், மொத்த நிலப்பரப்பு, மஞ்சள் சாகுபடி பரப்பளவு, விற்பனை விவரம், வங்கி கணக்கு விவரங்கள், குடும்ப வருமானம், பான் கார்டு எண், மஞ்சள் இருப்பு விவரம் உள்ளிட்ட 12 கேள்விகளுக்கு பதிலளிக்குமாறு நோட்டீஸில் கூறப்பட்டுள்ளது. 10 நாட்களுக்குள் உரிய விளக்கம் அளிக்க வேண்டும், தேவைப்பட்டால் நேரில் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

**முல்லைப்பெரியாறு அணையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட இன்று சட்டசபை சிறப்புக்கூட்டம் அனைத்துக்கட்சிகள் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது முல்லைப் பெரியாறு அணையில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட சட்ட சபையின் சிறப்புக் கூட்டம் இன்று (வியாழக்கிழமை) நடைபெறுகிறது. இதில் அனைத்துக் கட்சிகள் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.**

சென்னை, டிச.15–

தமிழகத்தின் தென்மாவட்டங்களுக்கு வாழ்வாதாரமாக விளங்குகிறது முல்லைப்பெரியாறு அணை.

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் உள்ள இந்த அணை வலுவிழந்து விட்டதாக கூறி புதிய அணை கட்ட கேரள அரசு முயன்று வருகிறது. மேலும் அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 120 அடியாக குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

சட்டசபை சிறப்பு கூட்டம்

முல்லைப் பெரியாறு அணை உறுதியாக இருப்பதை நிலைநாட்டி வரும் தமிழக அரசு அணையில் நீர்மட்டத்தை சுப்ரீம்கோர்ட்டு உத்தரவுப்படி தற்போதைய நிலையான 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்த வேண்டும் என்று கூறி வருகிறது.

மேலும் முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் தமிழக மக்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சியினரும் ஒற்றுமையுடன் இருப்பதை நிலை நாட்டும் வகையில் இன்று (வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு ஒரு சிறப்பு சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறும் என்றும், இந்தக் கூட்டத்தில், முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பற்றது என்று தவறாக பரப்பப்படும் பீதியின் அடிப்படையில் தமிழ்நாடு தனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுக்காது என்ற தீர்மானம் நிறைவேற்றப்படும் என்றும் முதல்–அமைச்சர் ஜெயலலிதா கடந்த 11–ந் தேதி அறிவித்தார்.

இதையடுத்து அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் தனித்தனியாக சட்டசபை சிறப்புக் கூட்டம் குறித்து அதிகாரப்பூர்வ கடிதம் அனுப்பப்பட்டது. செல்போனிலும் தகவல் தரப்பட்டது.

முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்தபடி, இன்று காலை 11 மணிக்கு சட்டசபை சிறப்புக் கூட்டம் நடைபெறுகிறது. சட்டசபை கூடியதும், சபாநாயகர் டி.ஜெயக்குமார், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை தொடர்பாக அரசின் சார்பில் ஒரு தனித் தீர்மானம் கொண்டு வருவது குறித்த அறிவிப்பினை வெளியிடுவார்.

ஜெயலலிதா தீர்மானம் கொண்டு வருவார்

பின்னர் முதல்–அமைச்சர் ஜெயலலிதா, முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் தமிழக அரசின் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுவார். அதைத் தொடர்ந்து பல்வேறு அரசியல் கட்சிகளின் சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் அதனை வழிமொழிந்து பேசுவார்கள்.

ஆளுங்கட்சி சார்பில் அவை முன்னவரும் நிதி அமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் பேசுவார். சபாநாயகர் டி.ஜெயக்குமாரும் தனது கருத்தைப் பதிவு செய்வார்.

நிறைவில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா, அரசு தனித்தீர்மானத்தின் அவசியம் பற்றி விரிவாக எடுத்துரைத்து, அதனை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்வார். பின்னர், குரல் வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் நிறைவேற்றப்படும். இந்த தீர்மானம், மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த சிறப்புக் கூட்டம் சுமார் 2½ மணி நேரம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டத்தின் முடிவில், தேதி குறிப்பிடாமல் சட்டசபை ஒத்திவைக்கப்படும்.

**டிசம்பர் மாதம் 1–ந்தேதி நிலவரப்படி உணவு தானியங்கள் கையிருப்பு இலக்கை விஞ்சி அதிகரித்தது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி

டிசம்பர் மாதம் 1–ந்தேதி நிலவரப்படி, உணவு தானியங்கள் கையிருப்பு நிர்ணயிக்கப்பட்ட இலக்கைக் காட்டிலும் அதிகரித்துள்ளது. கோதுமை கையிருப்பு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 1.10 கோடி டன்னை விட இரண்டு மடங்கிற்கு மேல் அதிகரித்து 2.76 கோடி டன்னாக உயர்ந்துள்ளது என அரசு செய்தி குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரிசி

அதே போல், அரிசி கையிருப்பு 2.71 கோடி டன்னாக உள்ளது. இது இலக்கை (52 லட்சம் டன்) காட்டிலும் சுமார் ஐந்து மடங்கு அதிகமாகும்.

இதன் காரணமாக, பாசுமதி அல்லாத பிற ரக அரிசி மற்றும் கோதுமை ஏற்றுமதிக்கு 2007–ஆம் ஆண்டு விதிக்கப்பட்டிருந்த தடையை மத்திய அரசு சற்று தளர்த்தியுள்ளது. இதனால், 20 லட்சம் டன் அளவிற்கு பாசுமதியல்லாத பிற வகை அரிசி மற்றும் கோதுமை ஏற்றுமதிக்கு தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து, அரசு அவசர கால தேவைகள் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 30 லட்சம் டன் அரிசியையும், 20 லட்சம் டன் கோதுமையையும் மாதாந்திர கையிருப்புக்கும் மேலாக இருப்பு வைத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பொது விநியோக முறை

இந்நிலையில், பொது விநியோக முறை வாயிலாக வழங்கப்படும் உணவு தானியங்களில் 10–15 சதவீதம் ஏழை எளிய மக்களை சென்றடைவதில்லை என மத்திய நுகர்வோர் விவகாரம் மற்றும் பொது விநியோக துறையின் ராஜாங்க அமைச்சர் கே.வி. தாமஸ் பாராளுமன்ற மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார். இது, முன்பு 40 சதவீதமாக இருந்தது.

**உணவு பொருள்கள் விலை குறைந்ததால், நவம்பர் மாதத்தில் பொது பணவீக்கம் 9.11 சதவீதமாக குறைந்தது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நவம்பர் மாதத்தில் பொது பணவீக்கம் 9.11 சதவீதமாக குறைந்துள்ளது. வெங்காயம், உருளைக்கிழங்கு, பால் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை குறைந்ததால் இப்பணவீக்கம் குறைந்துள்ளது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொதுப் பணவீக்க விகிதம், செப்டம்பரில் 10 சதவீதமாக மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது, அக்டோபர் மாதத்தில் 9.73 சதவீதமாக இருந்தது. 2010 நவம்பரில் 8.2 சதவீதமாக இருந்தது.

தொழில்துறை உற்பத்தி

அக்டோபர் மாதத்தில் தொழில்துறை உற்பத்தி 5.1 சதவீதம் சரிவடைந்துள்ளது. அமெரிக்க டாலருக்கு எதிராக ரூபாயின் வெளிமதிப்பு ரூ.53–க்கும் அதிகமான அளவில் சரிந்துள்ளது. இத்தகைய பாதிப்புகளுக்கிடையில் பொதுப் பணவீக்கம் ஓரளவு குறைந்துள்ளது ஆறுதல் அளிக்கும் செய்தி என நிபுணர்கள் தெரிவித்தனர்.

ஓர் ஆண்டு அடிப்படையில் அத்தியாவசியப் பொருள்கள் பணவீக்கம் 11.4 சதவீதத்திலிருந்து 8.53 சதவீதமாக குறைந்துள்ளது. உணவுப் பணவீக்கம் 11.06 சதவீதத்திலிருந்து 8.54 சதவீதமாக குறைந்துள்ளது. உற்பத்திப் பொருள்கள் பணவீக்கம் 7.66 சதவீதத்திலிருந்து 7.70 சதவீதமாக

*உயர்ந்துள்ளது. எரிபொருள் பணவீக்கம் 14.79 சதவீதத்திலிருந்து 15.48 சதவீதமாக அதிகரித்துள்ளது. கடந்த 2010 டிசம்பர் மாதத்திலிருந்து பொது பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பாரத ரிசர்வ் வங்கி கடந்த 2010 மார்ச் மாதத்திலிருந்து இதுவரை முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை 13 முறை உயர்த்தியுள்ளது. இதனால் நிறுவனங்கள் திரட்டும் கடனிற்கான வட்டி விகிதங்கள் உயர்ந்துள்ளன. எனவே, நிறுவனங்கள் விரிவாக்க திட்டங்களை மேற்கொள்ள தயக்கம் காட்டி வருகின்றன. பாரத ரிசர்வ் வங்கி, நாளை (டிசம்பர் 16) தனது பணக்கொள்கை ஆய்வறிக்கையை வெளியிட உள்ளது. இதற்கு முன் வெளியிட்ட ஆய்வறிக்கையில், ஏற்கனவே பல முறை வட்டி விகிதங்களை உயர்த்தி விட்டதால் மீண்டும் அந்த நடவடிக்கையில் இறங்க தயாராக இல்லை என இவ்வங்கி சூசகமாக தெரிவித்திருந்தது. தற்போது பணவீக்கம் ஓரளவு குறைந்துள்ளதால் வட்டி விகிதங்கள் மேலும் உயர்த்தப்பட வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது.*

நம்பிக்கை

*அதே சமயம் பணவீக்கம் இன்னும் 9 சதவீதத்திற்கும் அதிகமான அளவிலேயே உள்ளதால், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு தெரிவித்துள்ளது. நடப்பு நிதி ஆண்டு இறுதிக்குள் பணவீக்கம் 7 சதவீதமாக குறைந்து விடும் என மத்திய அரசு வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.*

***ஏப்ரல் – அக்டோபர் மாத காலத்தில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 11% சரிவு***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,மும்பை*

*நடப்பு ஆண்டின் ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான 7 மாதங்களில், வெள்ளை பூண்டு, தனியா மற்றும் மிளகாய் ஏற்றுமதி குறைந்து போனதால், நறுமணப் பொருள்களின் ஒட்டுமொத்த ஏற்றுமதி 11 சதவீதம் குறைந்து 2.96 லட்சம் டன்னாக சரிந்தது. இந்த தகவலை நறுமண பொருள்கள் வாரியம் தெரிவித்துள்ளது.*

*3.33 லட்சம் டன்*

*கடந்த ஆண்டின் இதே காலத்தில், நறுமண பொருள்கள் ஏற்றுமதி 3.33 லட்சம் டன்னாக இருந்தது.வெள்ளை பூண்டு, தனியா மற்றும் மிளகாய் ஏற்றுமதி முறையே 94 சதவீதம், 45 சதவீதம் மற்றும் 26 சதவீதம் குறைந்து, 1,000 டன், 16,000 டன் மற்றும் 1.11 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.அதேசமயம், மஞ்சள் ஏற்றுமதி 56 சதவீதம் அதிகரித்து 50,000 டன்னாகவும், மிளகு ஏற்றுமதி 33 சதவீதம் அதிகரித்து 13,750 டன்னாகவும், சீரகம் ஏற்றுமதி 4 சதவீதம் உயர்ந்து 20,500 டன்னாகவும் அதிகரித்துள்ளது.மிளகு உற்பத்தி செய்யும் பிற நாடுகளில் கையிருப்பு குறைந்ததும், சர்வதேச சந்தையில் நல்ல விலை கிடைத்ததும் மிளகு ஏற்றுமதி அதிகரித்ததற்கு காரணம் என ஜே.ஆர்.ஜி. வெல்த் மேனேஜ்மென்ட் நிறுவனத்தின் மூத்த ஆய்வாளர் சவுதா ரெட்டி கூறினார்.*

*இலக்கு*

*நடப்பு நிதி ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நறுமண பொருள்களின் ஏற்றுமதி இலக்கான 5 லட்சம் டன்னில், அக்டோபர் மாதம் வரையிலும் 59 சதவீத ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நறுமண பொருள்கள் வாரியம் தெரிவித்துள்ளது.*




***அதிக நிலப்பரப்பில் சாகுபடியாகும் 'சூரியகாந்தி'***



சூரியகாந்தி ஒரு முக்கியமான எண்ணெய் வித்துப்பயிர் ஆகும். இதில் கொலஸ்டீரால் என்னும் கொழுப்பு சத்து குறைவாக உள்ளதால் இதயநோய் உள்ளவர்கள் பயன்படுத்துவதற்கு சூரியகாந்தி எண்ணெய் பரிந்துரைக்கப்படுகிறது.

சூரியகாந்தி சாகுபடி

இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மராட்டியம் ஆகிய மாநிலங்களில் சூரியகாந்தி பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மற்ற எண்ணெய் வித்துப்பயிர்களை விட சாகுபடி குறைவாக இருப்பதால் அதிக பரப்பளவில் முதன்மை பயிராக சூரியகாந்தி சாகுபடி செய்ய வாய்ப்புகள் அதிகரித்து உள்ளது.

சூரியகாந்தி 90 நாட்கள் கொண்ட குறுகிய கால பயிராகும். அனைத்து மண்வகைகள் மற்றும் பருவங்களில் வளர்வதாலும், மானாவாரிக்கு ஏற்ற பயிராக இருப்பதாலும் சூரியகாந்தியை பயிரிட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். இதன் விதையில் 35 முதல் 40 சதவீதம் வரை எண்ணெய் சத்து உள்ளது.

நிலம் தயாரித்தல்

10 ஆண்டுகளுக்கு முன்னர் எக்டேருக்கு 700 கிலோ மட்டுமே சராசரி மகசூலாக கிடைத்தது. பின்னர் உயர் விளைச்சல் வீரிய ஒட்டு ரகங்கள் சூரியகாந்தியில் உருவாக்கப்பட்டு சாகுபடிக்கு அறிமுகப்படுத்தியதன் மூலம் தற்போது எக்டேருக்கு 1,850 கிலோவாக மகசூல் அதிகரித்து உள்ளது. தேவை அதிகரித்து வருவதால் சந்தையில் கணிசமான விலை கிடைக்கிறது.

சூரியகாந்தியை பயிரிட கரிசல் மண், வடிகால் வசதியுள்ள நிலங்கள் ஏற்றவை. மானாவாரியில் ஆடி மற்றும் கார்த்திகை பட்டத்திலும், இறவையில் சித்திரை மற்றும் தை பட்டத்திலும் பயிரிடலாம். சாகுபடிக்கு முன்பு டிராக்டர் கலப்பையை கொண்டு நிலத்தை 2 முறை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். அல்லது நாட்டு கலப்பையை கொண்டு 4 முறை உழுது புழுதியாக்க வேண்டும்.

நடவு–நீர்பாசனம்

மானாவாரியில் விதைக்கும் முன்பு, விதையை 2 சதவீத சிங்க் சல்பேட் கரைசலில் 12 மணி நேரம் ஊறவைத்து, நிழலில் உலர்த்திய பின்பு விதைக்க வேண்டும். கார்பென்டாசிம் மருந்தை 1 கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கலந்து 24 மணிநேரம் ஊறவைத்தும் விதைப்பு செய்யலாம். அசோஸ்பைரில்லம் 3 பாக்கெட், பாஸ்போ பாக்டீரியா அல்லது அசோபாஸ் கஞ்சி 6 பாக்கெட்டை கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். பின்னர் 15 நிமிடம் உலர்த்தி உடனடியாக விதைக்கவும்.

ஒட்டு பயிர் ரகங்களுக்கு 60★30 செ.மீ., மற்ற ரகங்களுக்கு 45★30 செ.மீ. இடைவெளி இருக்க வேண்டும். விதைப்புக்கு முன் $12^{1/2}$ கிலோ நுண்ணூட்ட கலவையை 40 கிலோ மணலுடன் கலந்து சாலில் இட்டு பின்னர் விதைப்பு செய்ய வேண்டும். விதைத்தவுடன், 3–ம் நாள், 20–ம் நாள், மொட்டு பிடிக்கும் பருவம், பூக்கள் பிடிக்கும் தருணங்களில் நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

அறுவடை–சேமிப்பு

புளூக்ளோரலின் அல்லது பென்டிமெத்திலினை எக்டேருக்கு 2 லிட்டர் தெளித்து நீர்பாய்ச்சுவதன் மூலம் களைகளை கட்டுப்படுத்தலாம். பூவின் அடிப்பாகத்தில் உள்ள இதழ்கள், பின்புறம் மஞ்சள் நிறமடைந்து பூக்கொண்டையில் உள்ள விதைகள் கடின தன்மை ஏற்பட்டால், முதிர்ச்சி அடைந்ததற்கான அறிகுறியை காட்டும்.

உலர்ந்த பூக்கொண்டைகளை அறுவடை செய்து, உலர்த்திய பின்பு விதைகளை தனித்தனியே பிரித்தெடுத்து சுத்தம் செய்ய வேண்டும். பின்னர் 8 அல்லது 9 சதவீதம் வரும் வரை நன்கு உலர வைக்க வேண்டும். பிரித்தெடுத்த சூரியகாந்தி விதைகளை நன்கு உலர்த்தி ஈரப்பதம் 8 முதல் 10 சதவீதம் இருக்குமாறு செய்து சேமிக்கலாம்.

–தகவல்: சீனிவாசன், கணேசமூர்த்தி, சந்திரகலா, எண்ணெய் வித்து துறை, வேளாண் பல்கலைக்கழகம், கோவை.

**மதிப்பூட்டப்பட்ட உணவு பொருள் தயாரிப்பில் 'வில்வப்பழம்'**



மனிதர்களின் ஆரோக்கியத்திற்கு சிறந்த ஆகாரமாக பழங்கள் விளங்குகின்றன. பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்தியில் இந்தியா 2–வது இடத்தில் உள்ளது. அறுவடைக்கு பின்பு பழங்களை சரிவர பாதுகாக்காக்காமல் இருப்பது, குளிர்ச்சாதன வசதியின்மை, முறையான சேமிப்பு மற்றும் வியாபாரம் இல்லாத காரணத்தால் 72 சதவீத பழங்கள் வீணாகின்றன.

வில்வப்பழம்

இந்தியாவில் உள்ள பழ வகைகளில் வில்வப்பழத்திற்கு முக்கிய இடம் உண்டு. இதில் ஏராளமான மருத்துவகுணங்கள் உள்ளன. பண்டைய காலம் முதல் வில்வத்திற்கு சித்த, ஆயுர்வேத மருத்துவத்தில் தனி இடம் உண்டு. இந்த மரத்தின் வேர், பட்டை, இலை, பூ, காய், பிஞ்சு, பழம் ஆகிய அனைத்தும் மருத்துவ குணங்கள் உள்ளன. வில்வ மரங்கள் தமிழ்நாடு,

உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், ஒரிசா, பீகார் ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் காணப்படுகின்றன.

இந்த பழத்தில் 61.5 சதவீத நீர்ச்சத்து, 1.8 சதவீத புரதசத்து, 0.39 கோடீப்பு, 1.7 சதவீத தாது உப்புக்கள், 32 சதவீத மாவுப்பொருட்கள் உள்ளன. உலர்ந்த பூக்களை பொடி செய்து பயன்படுத்தினால் மந்தத்தை போக்கலாம். வில்வ இலை சாறுடன் மிளகு கலந்து குடித்தால் காமாலை நோய் குணமாகும். வேரும், பட்டையும் பொடி செய்த பயன்படுத்துவதன் மூலம் மூக்கில் இருந்து ரத்தம் வடிவது நிற்கும்.

மருத்துவ குணங்கள்

வில்வ பிஞ்சை அனைத்து எருமை தயிரில் கலந்து குடித்தால் வயிற்று கடுப்பு, பேதி குணமாகும். வில்வ பிஞ்சு, அத்தி பிஞ்சையும் நீரில் கலந்து குடிக்க நாவறட்சி, விக்கல், கை கால் சில்லிடுதல் குணமாகும். வில்வக்காய், திப்பிலி, சுக்கு சேர்த்து அரைத்து நெய்யில் கலந்து மூக்கில் 2, 3 சொட்டு விடுவதன் மூலம் அடிக்கடி ஏற்படும் தும்மலை குணப்படுத்தலாம். வில்வக்காயை, பசும்பாலுடன் அரைத்து தலைக்கு தேய்த்து குளித்தால் உடல் சூடு, கண் எரிச்சல் நீங்கும். வில்வ தைலம் உடலை அழகுப்படுத்த பயன்படுத்தப்படுகிறது. வில்வப்பழம் மற்றும் நெற்பொறியை சாப்பிட கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் சுவாச காசம் குணமாகும். வில்வ பானம் குடல் புண்ணை குணப்படுத்தும். வில்வப்பழத்தை எண்ணெயில் காய்ச்சி காதுக்கு சொட்டு மருந்தாக பயன்படுத்த சீழ் வடிதல் குணமாகும்.

உணவுப்பொருட்கள்

வில்வ பழத்தை பதப்படுத்தி உடனடி உணவு வகைகளான கேண்டி, ஸ்குவாஷ், வில்வ பார், மிட்டாய், ஜாம், முரபா, சிறுதானிய பார், சத்து மாவு, வில்வ பழ மிக்ஸ், நூடுல்ஸ், இலைகளை பயன்படுத்தி கோதுமை ரொட்டி மிக்ஸ், அரிசி ரொட்டி மிக்ஸ், பல தானிய ரொட்டி மிக்ஸ், வில்வ இலை சூப் மிக்ஸ் போன்ற மதிப்பூட்டப்பட்ட பொருட்களை தயாரிக்க பயன்படுத்தலாம்.

வில்வப்பழம் மற்றும் இலையை பயன்படுத்தி தயாரிக்கப்படும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் பொருளாதார மேம்பாடு அடைவதுடன், நோயற்ற வாழ்க்கை சூழலை உருவாக்க முடியும்.

## கரும்பு பயிரை தாக்கி அழிக்கும் இளங்குருத்து புழுக்களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

கோவை மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த பருவமழையால் கரும்பு பயிரை ஏராளமான விவசாயிகள் பயிர் செய்து உள்ளனர். மேலும் கரும்பு முன்பருவ நடவு நடப்பு டிசம்பர் மற்றும் வருகிற ஜனவரி மாதங்களில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு பயிரிட்டு முளைத்து வந்துள்ள கரும்பு பயிரில் இளங்குருத்துப் புழுவின் தாக்குதல் அதிகம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

அறிகுறிகள்

குறிப்பாக ஒரு மாதம் முதல் மூன்று மாத வயதுடைய கரும்புப் பயிரிகளில் குருத்து அழுகல் மற்றும் நிலப்பரப்புக்கு அருகாமையில் உள்ள கணுக்களில் துளைகள் காணப்படும் அறிகுறிகள் அதிகமாக தென்படுகிறது.

இவற்றை கட்டுப்படுத்த கரும்பு பயிரில் ஊடுபயிராக பாசிப்பயறு, உளுந்து, தக்கைப்பூண்டு ஆகிய பயிர்களை பயிரிட வேண்டும். மேலும் பார்களிடையே கரும்பு சோகைகளை 10 முதல் 15 சென்டிமீட்டர் உயரத்துக்கு பரப்பி விட வேண்டும். கரும்பு நடவு செய்த 45–வது நாள் கரும்புகளைச் சுற்றி நன்றாக மண் அனைத்து விட வேண்டும்.

கட்டுப்பாட்டு முறைகள்

கரும்பு பயிரில் இளங்குருத்துப் புழு தாக்குதல் தென்பட்டால் கார்போப்யூரான் 3ஜி குருணை மருந்தை ஒரு எக்டேருக்கு 33 கிலோ கிராம் என்ற அளவில் மண்ணில் இட வேண்டும். குருத்து அழுகல் காணப்படும் பயிர்கள் தென்பட்டால் அவற்றை உடனடியாக பிடுங்கி அழித்து விட வேண்டும்.

மேலும் குருத்தில் செவிடால் 4ஜி குருணை மருந்து 12.5 கிலோ கிராம் அல்லது லிண்டேன் 10ஜி குருணை மருந்து 12 கிலோகிராம் மருந்தினை 37.5 கிலோ கிராம் மணலுடன் கலந்து இட வேண்டும்.

இதே போல் ஒரு எக்டேருக்கு குளோர்பைரிபாஸ் 25 சதவீதம் இசி 1,000 மில்லி அல்லது வேப்ப எண்ணெய் 5 சதவீதம் 1,000 மில்லி என்ற அளவில் இரண்டு முறை பயிர்களின் மீது தெளித்து கட்டுப்படுத்தலாம்.

தகவல்:– க.இளங்கோ, வேளாண்மை இணை இயக்குனர், கோவை.

**பச்சை தேயிலை விலை கிலோவுக்கு ரூ.25 வழங்க வேண்டும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டில் தீர்மானம்**

ஊட்டி, டிச.15–

பச்சை தேயிலைக்கு கிலோவிற்கு குறைந்த பட்சம் ரூ.25 வழங்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி தாலுகா மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தாலுகா மாநாடு

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஊட்டி தாலுகா 7–வது மாநாடு ஊட்டி பிங்கர்போஸ்ட் பகுதியில் மகிமைநாதன் நினைவரங்கத்தில் நடை பெற் றது. மாநாட்டை சந்திரசேகர், ராஜேஸ்வரி ஆகியோர் தலைமை குழுவாக இருந்து நடத்தினர்.

மாநாட்டை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கோவை மாவட்ட செயற்குழு உறுப்பினர் கிருஷ் ணமூர்த்தி மாநாட்டை தொடங்கி வைத்தார். மாவட்ட செயலாளர் ஆர்.பத்ரி பேசினார். மாநாட்டை வாழ்த்தி செயற்குழு உறுப் பினர்கள் தியாகராஜன், காந்தி, ஆல்தொரை ஆகியோர் பேசினார்கள். முன்னதாக செங்கொடியை செயற்குழு உறுப்பினர் வி.வி.கிரி ஏற்றி வைத்தார்.

பிங்கர்போஸ்ட் பகுதியில் இருந்து மாநாட்டு திடல் வரை ஊர்வலமாக கட்சி தொண்டர்கள் வந்த னர்.

கமிட்டி உறுப்பினர்கள்

மாநாட்டில் ஊட்டி தாலுகா கமிட்டி செயலாளராக கே.ராஜேந்திரன் மற்றும் கமிட்டி உறுப்பினர்களாக டி.பி. ராஜேஸ்வரி, சுசிலா ஆல் தொரை, வி.பி.பாலகிருஷ் ணன், சந்திரசேகர், எம்.சுப்பி ரமணி, மொய்ஷின், ரமேஷ் பாபு, என்.எல்.சுப்பிரமணி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற மாநாட்டில், பஸ் கட்டண உயர்வு, பால் விலை உயர்வை தமிழக அரசு வாபஸ் பெற வேண்டும். ஊட்டி பஸ் நிலையத்தை சீர்படுத்த வேண்டும். பச்சை தேயிலைக்கு கிலோவிற்கு குறைந்தபட்சம் ரூ.25 வழங்க வேண்டும்.

மருத்துவ கல்லூரி

மைசூர் சாலையில் தற்போது உள்ள இரவு நேர போக்குவரத்து தடையை நீக்க வேண்டும். நீலகிரி மாவட்டத் தில் அரசு என்ஜினீயரிங், மருத் துவ கல்லூரிகளை தமிழக அரசு தொடங்க வேண்டும். ஊட்டி தலைக்குந்தா வழித்தடத்தில் இரவு 10 மணி வரை பஸ்கள் இயக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்பட பல்வேறு தீர்மானங் கள் நிறைவேற்றப் பட்டன. மாவட்ட மாநாடு அடுத்த மாதம் (ஜனவரி) 7,8,9 ஆகிய தேதிகளில் கோத்த கிரியில் நடைபெறுகிறது. மாவட்ட மாநாடு பிரதிநிதியாக 26 பேர் ஊட்டி கமிட்டியில் தேர்வு செய்யப்பட்டனர்.முன்னதாக கிருஷ்ணன் வரவேற்றார். முடிவில் ராஜூ நன்றி கூறினார்.